<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

O.S.No. 939/2023 Date : 20.02.2026

பெயர் : முகம்மது அசாரூதீன் பி.வா.சா. 1

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.

1. வழக்கில் நான் ஒன்றாவது பிரதிவாதி என்றால் சரிதான். இவ்வழக்கு விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியும் புல எண் 59/4.அதனுடைய பைமாஸ் எண் தெரியுமா என்றால் தெரியாது.தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 0.21 ஏர்ஸ் ஆகும். மேற்படி இடத்தின் அளவு சென்ட் கணக்கில் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து ஆதியில் வெங்கட்ராம ஐயர் என்பவருக்கு பாத்தியமான சொத்து என்றால் அது பற்றி தெரியாது. வெங்கட்ராம ஐயர் என்பவருக்கு பாத்தியமான சொத்தை அஸ்தினாபுரம் கிராம மக்களுக்கு கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது.அஸ்தினாபுரம் கிராம மக்களுக்கு சொந்தமான இடத்தை வெங்கட்ராம ஐயர் என்பவருக்கு கொடுத்ததற்கு வெங்கட்ராம ஐயர் தனக்கு பாக்கியமான தாவா சொத்தை அஸ்தினாபுரம் கிராம மக்களுக்கு பரிவர்த்தனை ஆவணம் மூலம் 1948 ஆம் ஆண்டு பரிவர்த்தனை மூலம் பரிவர்த்தனை செய்து கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.அந்த பரிவர்த்தனை ஆவணம் பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 1874 என பதிவாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1948 ஆம் ஆண்டு முதல் தாவாசத்தை அஸ்தினாபுரம் கிராம மக்கள் களமாகவும் விவசாய பொருட்களை வைத்து மேற்படி இடத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அது பற்றி தெரியாது.தாவா சொத்தானது அரசுக்கு பாத்தியமான புறம்போக்கு வகைப்பாடான நிலம் கிடையாது என்றால் அது பற்றி தெரியாது.

2. ஆனால் வருவாய்த்துறையினர் அந்த இடம் அரசுக்கு பாத்தியமான புறம்போக்கு இடம் எனக் குறிப்பிட்டு அந்த இடத்தை மின்வாரியத்திற்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள். அவருக்கு தனிநபருக்கு பாத்தியமான சொத்தை அரசு நிலமாக மாற்ற வருவாய்த் துறையினருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. தாவா சொத்தை பல்லாவரம் நகராட்சி வாதிகளின் அனுபவத்தை தடுத்ததால் பூந்தமல்லி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 1197/1987 என வழக்கு தாக்கல் செய்து அதில் வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.1987 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில் வாதிகளின் சுவாதீனம் பாதுகாக்கப்பட்ட சுவாதினம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவாசொத்திற்கு வெங்கட்ராமன் ஐயர் என்பவர் பெயரில் பட்டா எண் 1430 என வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.மேற்படி பட்டாவை தற்போது வரையில் வருவாய் துறையினர் ரத்து செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது ஆனால் தாவா சொத்துக்கு மின்வாரியத்தின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.